# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10. Ph. 0452 – 4354302


## பழைய ஏற்பாட்டில் முன்னடையாளங்கள்

**முன்னுரை:**

இந்தப் பாடத்தை நான் தயார் செய்ய ஆரம்பித்தபொழுது, வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகங்களில் (பஞ்ச ஆகமங்கள்) ஏராளமான முன்னடையாளங்கள் இருப்பதைக் கண்டு பிரமித்தேன். அவைகள் எல்லாவற்றையும் இந்தப் பாடத்தில் சேர்க்க இயலாது என்பதையும் உணர்ந்தேன். எனினும் நான் சேர்த்துள்ள "முன்னடையாளங்கள்" மற்ற முன்னடையாளங்களையும் அறிந்துகொள்ளத்தக்கதான ஆவிக்குரிய பசியினை உங்களுள் தூண்டுமென நான் நிச்சயமாக நம்புகிறேன். இப்பாடத்தினை படிக்கும்போது, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே பழைய, புதிய ஏற்பாடுகளின் பொருளும், கருத்துமாய் இருக்கிறார் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

1. யோவான் 5:39, "வேதவாக்கியங்களை (பழைய ஏற்பாட்டின் வேதவாக்கியங்கள்) ஆராய்ந்து பாருங்கள். என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே."
2. லூக்கா 24:27, "மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதிய வேத வாக்கியங்களெல்லாவற்றிலும் (பழைய ஏற்பாட்டில்) தம்மைக்குறித்து சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்து காண்பித்தார்."
3. லூக்கா 24:44, "மோசேயின் நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேற வேண்டியதென்று. . ."
4. அப்போஸ்தலர் 8:35, "பிலிப்பு. . . இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவை குறித்து அவனுக்கு பிரசங்கித்தான்."
5. அப்போஸ்தலர் 17:2–3, "பவுல் வேதவாக்கியங்களின் (பழைய ஏற்பாடு) நியாயங்களை. . .கிறிஸ்து பாடுபடவும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதென்றும், நான் உங்களுக்கு அறிவிக்கிற. . .திருஷ்டாந்தப்படுத்தினான்."

பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் சுவிசேஷம் முன்னடையாளங்களிலும், நிழல்களிலும், அடையாளங்களிலும், தீர்க்கதரிசிகளிலும், சாயல்களிலும், உருவங்களிலும் மறைந்துள்ளது. புதிய ஏற்பாட்டில் அவர் முழுமையாக வெளிப்படுத்தப் பட்டிருக்கிறார். இதையே "புதியது பழையதினுள் இருக்கிறது, பழையது புதியதால் விளக்கப்படுகிறது" எனத் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

800–க்கும் அதிகமான பழைய ஏற்பாட்டுப் பகுதிகள் புதிய ஏற்பாட்டில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. அவற்றில் பல கிறிஸ்துவைக் குறிக்கின்றன. பழைய ஏற்பாட்டினைப் படித்தல் எவ்வளவு உபயோகமானது என்பதை நீங்கள் உணர்ந்துகொள்வதும், அதன் விளைவாக கிறிஸ்துவின்பேரில் ஆழமான அன்புடையவர்களாய் நீங்கள் மாறவேண்டும் என்பதே முன்னடையாளங்களைக் குறித்த இப்பாடத்தை நான் உங்களுக்கு போதிப்பதற்கான நோக்கமாகும்.

### பாடத்தின் முக்கியத்துவம் :

கிறிஸ்துவே வேதத்தின் மையமாகவும், பாடமாகவும், கருப்பொருளாகவும் இருக்கிறார். ஒவ்வொரு புத்தகத்திலும் அவர் சுட்டிக்காட்டப்படுகிறார். கிறிஸ்துவின் பல முன்னடையாளங்கள் பஞ்ச ஆகமங்களில் இருப்பது தெளிவாகிறது. முன்னடையாளங்களைக் குறித்து கவனமாக கற்றறிவது உங்கள் ஆராய்ச்சிக்கு புத்துணர்வையும் கிறிஸ்துவின் பேரில் இன்னும் அதிகமான ஈடுபாட்டையும் கொடுக்கும். முன்னடையாளங்களைக் குறித்த அறிவு பழைய ஏற்பாட்டின் உயிரோட்டத்தை அறிந்து கொள்ள உதவுகிறது. அத்துடன் வேதாகமம் 66 புத்தகங்களை உடையதாக இருந்தபோதிலும் கிறிஸ்துவின் பலி, உயிர்த்தெழுதல், எதிர்கால மகிமை ஆகியவற்றின் மூலம் மனிதனுக்குக் கிட்டும் மீட்பைக் குறித்து வெளிப்படுத்தும் ஒரே மாபெரும் புத்தகம் என்பதையும் மீண்டும் நிச்சயப்படுத்துகிறது.

**பாடம்**

### I. முன்னடையாளங்களுக்கான வேத ஆதாரம் :

1. நபர்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் – 1 கொரிந்தியர் 10:1–11 படித்து ஆராயவும்.
2. பொருட்கள், அடையாளங்கள், நிறங்கள், விசேஷித்த நாட்கள், பலிகள், பண்டிகைகள் போன்றவற்றிற்கு – சுருக்கமாக – ஆசரிப்புக்கூடாரத்தைக் குறித்து – எபிரெயர் 9:1–26 படித்து ஆராயவும்.

## II. முன்னடையாளத்தின் பொருள் :

**அ. நேர்மறையாக :**

1. புதிய ஏற்பாட்டில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருக்கும் ஒரு சத்தியம் பழைய ஏற்பாட்டில் தேவதிட்டத்தால் எடுத்துக்காட்டாக உருவாக்கப்பட்டு உள்ளதே முன்னடையாளம் ஆகும். அது,
   - i) ஆட்களைக் குறிக்கலாம் – ஆதாம் போல் (ரோமர் 5:14).
   - ii) ஒரு நாட்டினைக் குறிக்கலாம் – இஸ்ரவேல் ஜனம் (1 கொரிந்தியர் 10:11).
   - iii) ஒரு பொருளைக் குறிக்கலாம் – திரைச்சீலை (எபிரெயர் 10:19–20).
   - iv) நியமத்தைக் குறிக்கலாம் – குற்ற நிவாரணபலி (எபிரெயர் 9:11–12).
   - v) சடங்கினைக் குறிக்கலாம் – புளிப்பில்லாத அப்பப்பண்டிகை (1 கொரிந்தியர் 5:7).
   - vi) ஒரு மிருகத்தைக் குறிக்கலாம் – ஆடு (யோவான் 1:29).
2. முன்னடையாளங்கள் புதிய ஏற்பாட்டில் சாயல்களாக (எபிரெயர் 8:5), ஒப்பனைகளாக (எபிரெயர் 9:9), நிழல்களாக (எபிரெயர் 10:1) குறிப்பிடப்படுகிறது.

**ஆ. எதிர்மறையாக :**

1. புதிய ஏற்பாட்டில் நிறைவேறுதலைக் காணாத நபரையோ அல்லது பொருளையோ பூரணமாக முன்னடையாளமாகக் கொள்ளக்கூடாது.
2. இதற்கு விதிவிலக்காக, மற்ற ஒற்றுமைகளும், ஆவிக்குரிய முக்கியத்துவமும், ஆவியானவர் தரும் அர்த்தமும் தெளிவாக இருக்குமானால் யோசேப்பைப் போன்ற ஒரு நபரையோ அல்லது பொருளையோ முன்னடையாளமாகக் கொள்ளலாம்.

## III. முன்னடையாளங்களின் நோக்கம் :

**அ. எடுத்துக்காட்டாக : (1 கொரிந்தியர் 10:11)**

(திருஷ்டாந்தங்களாக) "இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்கு சம்பவித்தது. . ." வேறுவிதமாக சொல்வதானால், முன்னடையாளங்கள் என்பவை கிறிஸ்துவோடு நமக்குள்ள உறவிலும், அவருக்குச் செய்யும் ஊழியத்திலும் நாம் எதிர்பார்க்கவேண்டிய உதாரணங்களாகும்.

**ஆ. நமக்கு எச்சரிப்புகளாக : (1 கொரிந்தியர் 10:11)**

"நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது."முன்னடையாளங்கள் நமக்கு எடுத்துக் காட்டுகளாக மட்டுமன்றி, நாம் இன்னும் அதிக பரிசுத்தமான அர்ப்பணிப்புள்ள வாழ்க்கை வாழ நம்மைக் கண்டித்து உணர்த்துகின்றனவாக அமைந்துள்ளன (2 தீமோத்தேயு 3:16–17–ஐ வாசிக்கவும்).

**இ. நாம் கற்றுக்கொள்ளத்தக்கதாக : (ரோமர் 15:4)**

". . . முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது." முன்னடையாளங்கள் பெரிய உண்மைகளின் பொருளை விளக்கும் உதாரணங்களாக மாத்திரம் இல்லை (ரோமர் 4:23,24).

**ஈ. கிறிஸ்துவை நமக்கு வெளிப்படுத்தவும், அவரை மகிமைப்படுத்தவும் அவரைக் குறித்து நமக்குப் போதிக்கவும் கொடுக்கப்பட்டுள்ளன :**

லூக்கா 24:27, ". . .வேதவாக்கியங்கள் எல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்." லூக்கா 24:44, ". . . என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகள் எல்லாம் நிறைவேற வேண்டியதென்று. . ." (யோவான் 5:39).

## IV. ஆதியாகமத்திலுள்ள முன்னடையாளங்கள் :

**அ. ஆதாம் :** புதிய ஏற்பாட்டில் ஒப்பிட்டு சரிபார்க்க – 1 கொரிந்தியர் 15:45, ரோமர் 5:14 பாருங்கள். ஆதாம் சில விதங்களில் இயேசுகிறிஸ்துவுக்கு ஒத்த முன்னடையாளமாகவும், சில விதங்களில் வேறுபட்ட சாயலாகவும் காணப்படுகிறான்.

1. ஒற்றுமைகள் :
   - i) இருவரும் புதிய சிருஷ்டிப்புகளின் தலையாக இருந்தனர்: ஆதாம் – பழைய சிருஷ்டிப்பு (ஆதியாகமம் 1:26–28, லூக்கா 3:38, ஆதியாகமம் 2:15–25). கிறிஸ்து – புதிய சிருஷ்டிப்பு (வெளிப்படுத்தல் 11:15; 20:6, 2 கொரிந்தியர் 5:17, எபேசியர் 2:10; 4:24).
   - ii) இருவரும் காயப்படுத்தப்பட்டு, காயப்படுத்தப்பட்டதிலிருந்து அவர்களுக்கு மணவாட்டிகள் உருவாக்கப்பட்டு கொடுக்கப்பட்டனர் (ஆதியாகமம் 2:22–25; எபேசியர் 5:22–32).

2. வேற்றுமைகள் :

   i) ஆதாமுக்கு ஜீவன் கொடுக்கப்பட்டது (ஆதியாகமம் 2:7). கிறிஸ்து ஜீவன் கொடுக்கிறார் (1 கொரிந்தியர் 15:45, யோவான் 10:10,28).

   ii) ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறார்கள் (1 கொரிந்தியர் 15:22). கிறிஸ்துவுக்குள் விசுவாசிக்கிற எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுகிறார்கள் (1 கொரிந்தியர் 15:22, 1 யோவான் 5:12, யோவான் 20:31).

   iii) ஆதாமுக்கு தோல்வி அடைந்த மணவாட்டி கொடுக்கப்பட்டது (ஆதியாகமம் 2:22–36). கிறிஸ்துவுக்கோ தோல்வி அடையமுடியாத மணவாட்டி கொடுக்கப்படுகிறது (எபேசியர் 5:25–27; வெளி. 19:7,8).

   iv) ஆதாம் இயற்கையானதும், மண்ணுக்குரியதுமானதற்கு தலையாயிருந்தான். கிறிஸ்துவோ ஆவிக்குரியதும், விண்ணுக்குரியதுமானதற்கு தலையாயிருக்கிறார். அவர் வானத்திலிருந்து வந்த கர்த்தர் (1 கொரிந்தியர் 15:46–48).

**ஆ. ஏவாள் :** விசுவாசிக்கும், திருச்சபைக்கும் முன்னடையாளமாக இருக்கிறாள்.

1. ஆதாமிலிருந்து அவள் உருவாக்கப்பட்டாள் (ஆதியாகமம் 2:22). நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப் பட்டோம் (2 கொரிந்தியர் 5:17).
2. அவள் ஆதாமுக்கு மணவாட்டியாகவும், துணையாகவும் இருக்கும்படி கொடுக்கப்பட்டாள் (ஆதியாகமம் 2:18–24). திருச்சபை இயேசுகிறிஸ்துவின் மணவாட்டியாகவும், அவருடன் இணைந்து பணி செய்கிறதாயும் இருக்கிறது (எபேசியர் 5:22–32; யோவான் 3:28,29; 2 கொரிந்தியர் 6:1).
3. அவளுக்கு ஆதாமின் சுபாவம் கொடுக்கப்பட்டது (ஆதியாகமம் 5:2; 2 கொரிந்தியர் 11:2–3). நமக்கு கிறிஸ்துவின் சுபாவம் கொடுக்கப்பட்டுள்ளது (கலாத்தியர் 2:20; 2 பேதுரு 1:4; 2 கொரிந்தியர் 5:17).

**இ. தோல் உடைகள் :** ஆதி.3:21. ஆதாமின் நிர்வாணத்தை மறைக்க தேவனால் தோலுடை கொடுக்கப்பட்டது. இது கிறிஸ்துவின் நீதியினால் விசுவாசிகள் யாவருக்கும் கிடைக்கும் நீதியின் ஆடையைக் குறிக்கிறது (பிலிப்பியர் 3:9; 1 கொரிந்தியர் 1:31; ஏசாயா 61:10; ரோமர் 3:21; வெளி. 19:8).

**ஈ. காயீன், ஆபேல் :** இச்சகோதரர்கள் அவிசுவாசிகளுக்கும், விசுவாசிகளுக்கும் உள்ள வேறுபாட்டினை எடுத்துக் காட்டும் முன்னடையாளங்களாக இருக்கின்றனர் (ஆதியாகமம் 4:1–15). தன் பாவநிலையையும், பலியிடுதலின் அவசியத்தையும் உணர காயீன் மறுத்தான். பெருமையினால் நிறைந்து, தன் சொந்த கைகளின் பிரயாசமும், தான் தெரிந்துகொண்டதுமான காணிக்கையைக் கொடுத்து, தேவனுடைய உண்மையான அங்கீகரிப்பைத் தேடினான். அவன் புறக்கணிக்கப்பட்டதால், கோபத்திற்கும் கொலைக்கும் இடங்கொடுத்தான். ஆபேல் ஆவிக்குரிய மனிதனுக்கு ஒரு முன்னடையாளம். சுபாவத்தின்படி, காயீனைவிடச் சிறந்தவனாக தோன்றாவிட்டாலும் "ஒரு மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்" (எபிரெயர் 11:4). அவன் கீழ்ப்படிந்தான். விசுவாசத்தினாலே தன் பாவநிலையையும், சிந்தப்பட்ட இரத்தத்தின் மூலம் வருகிற இரட்சிப்பின் அவசியத்தையும் உணர்ந்தான் (எபிரெயர் 11:4; 1 யோவான் 3:12; எபிரெயர் 9:22 ஆகியவற்றை வாசியுங்கள்).

**உ. மந்தையின் தலையீற்று :** ஆதியாகமம் 4:4. கிறிஸ்து பாடுபடும் இரட்சகர் என்பதைத் தெளிவாகவும், தொடர்ந் தேர்ச்சியாகவும் காட்டும் முன்னடையாளமாக ஆட்டுக்குட்டி திகழ்கிறது (யோவான் 1:29; எபிரெயர் 9:26). கிறிஸ்துவே தீங்கு செய்யாத, தாழ்மையான, பழுதற்ற, 'அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஆட்டுக்குட்டியாக' இருந்தார் (ஏசாயா 53:7).

**ஊ. ஏனோக்கு :** ஆதியாகமம் 5:22–24. இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது, உயிரோடிருந்து, உபத்திரவக் காலத்திற்கு முன் மேகங்கள் மேல் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படும் விசுவாசிகளுக்கு முன்னடையாளமாக இருக்கிறார் (எபிரெயர் 11:5; 1 தெசலோனிக்கேயர் 4:16,17).

**எ. ஆபிரகாம் :** ஆதியாகமம் 15:6. விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படும் யாவருக்கும் தகப்பனாகவும், முன்னடையாளமாகவும் இருக்கிறார் (கலாத்தியர் 3:6,7; ரோமர் 4:3; யாக்கோபு 2:23). தன்னுடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் இயேசுகிறிஸ்துவை ஒப்புக்கொடுத்த பிதாவாகிய தேவனுக்கு முன்னடையாளமாகவும் இருக்கிறார் (ஆதியாகமம் 2:29; ரோமர் 8:32). தன் மகனுக்கு ஓர் மணவாட்டியைத் தேடினவர் (ஆதியாகமம் 24ம் அதிகாரம், 2 கொரிந்தியர் 11:2).

**ஏ. மெல்கிசேதேக் :** (நீதியின் ராஜா என்னும் அர்த்தங்கொள்ளும் பெயருடைய ஓர் ஆசாரியன் – ஆதியாகமம் 14:17,18). ராஜாவாகவும், ஆசாரியராகவும் இருக்கின்ற இயேசுகிறிஸ்துவுக்கு ஓர் முன்னடையாளமானவர். அவர் சாலேமின் ராஜாவாகவும் இருந்தார். 'சாலேம்' என்பதற்கு "சமாதானம்" என்று பொருள். உயிர்த்தெழுதலில் கிறிஸ்துவின்

ஆசாரிய ஊழியத்திற்கு முன்னடையமாகக் காணப்படுகிறார். ராஜ அதிகாரத்தையும், முடிவில்லாத ஆசாரியத் துவத்தையும் குறிக்கிறது (எபிரெயர் 7:2; 5:6; 6:20).

ஐ. **சாராள் :** அடிமையாயிருந்த ஆகாருக்கு மாறாக ''சுயாதீனமுள்ளவள்'' என்ற நிலை யில் கிருபைக்கு முன்னடையாளமானவள் (ஆதியாகமம் 17:15–19; கலாத்தியர் 4:21–31).

ஒ. **ஈசாக்கு :** ஆதியாகமம் 21:3. பல காரியங்களுக்கு முன்னடையாளமானவன். மிகத் தெளிவானவைகள் :

1. மரணபரியந்தம் கீழ்ப்படிந்த கிறிஸ்துவுக்கு முன்னடையாளம் (ஆதியாகமம் 22:1–10; பிலிப்பியர் 2:5–8).
2. புறஜாதியிலிருந்து அழைக்கப்பட்ட மணவாட்டிக்கு மணவாளனாகிய கிறிஸ்துவுக்கு முன்னடையாளம் (ஆதியாகமம் 24–ம் அதிகாரம் முழுவதும்; எபேசியர் 5:22–31).
3. உயிர்த்தெழுதலுக்கு முன்னடையாளம் (எபிரெயர் 11:17–19).

**புதரிலே சிக்கியிருந்த ஆட்டுக்கடா :** ஆதியாகமம் 22:13. நம்முடைய இடத்திலே நமக்குப் பதிலாகப் பலியான கிறிஸ்துவுக்கு முன்னடையாளம் (எபிரெயர் 10:5–10; 11:17–19).

ஓ. **ஆதியாகமம் 24 முழு அதிகாரம் :**

**ஆபிரகாம் :** தன் மகனுக்கு மணவாட்டியைத் தேடும் பிதாவுக்கு முன்னடையாளம்.

**ஊழியக்காரன் :** தன்னைக் குறித்து மேன்மைபாராட்டாத பரிசுத்த ஆவியான வருக்கு முன்னடையாளம். மணமகனைக் குறித்து மேன்மையாகப் பேசி மணவாட்டியை மணவாளன் பக்கம் திருப்புகிறவர் – மணவாளனுடைய பரிசுகளை (வெள்ளியுடைமைகள், பொன்னுடைமைகள்) மணவாட்டிக்கு அள்ளிக்கொடுப்பவர் (1 கொரிந்தியர் 12:7–11; கலாத்தியர் 5:22,23). மணவாட்டியை மணவாளனிடம் கொண்டுவருபவர் (1 தெசலோனிக்கேயர் 4:16,17).

**ரெபெக்காள் :** கன்னிகையாகிய திருச்சபைக்கு முன்னடையாளம். வெளியே அழைக்கப்பட்ட மணவாட்டி (ஆதியாகமம் 24:16; 2 கொரிந்தியர் 11:2; எபேசியர் 5:28–32).

**ஈசாக்கு :** ஊழியக்காரனுடைய சாட்சியின் மூலம் மணவாட்டியை நேசிக்கும் மணவாளனுக்கு முன்னடையாளம் (1 பேதுரு 1:18). தன் மணவாட்டியை சந்தித்து ஏற்றுக் கொள்ள வெளியே செல்லும் மணவாளன் (1 தெசலோனிக்கேயர் 4:16–18).

ஔ. **யோசேப்பு :** கிறிஸ்துவுக்கு முன்னடையாளம். புதிய ஏற்பாட்டில் இது உறுதி செய்யப்படவில்லையாயினும், ஏராளமான, தெளிவான ஒற்றுமைகள் இதை தெளிவுபடுத்துகின்றன.

1. தன் தந்தையின் அன்பிற்குப் பாத்திரமானவன் (ஆதியாகமம் 37:4; யோவான் 3:35; 5:20;17:24,26).
2. தன் சொந்த சகோதரர்களால் பகைக்கப்பட்டவன் (ஆதியாகமம் 37:4; யோவான் 15:25).
3. அவனது சொற்கள் அவன் சகோதரர்களால் நிந்திக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டன (ஆதியாகமம் 37:8; ஏசாயா 53:3; யோவான் 15:18,24,25).
4. தன் சகோதரர்களால் 'உருவகமாக' கொலை செய்யப்பட்டவன் (ஆதியாகமம் 37:24; மத்தேயு 27:35–37; அப்போஸ்தலர் 2:23).
5. 'உருவகமாக' உயிர்த்தெழுந்தவன் – புறஜாதியாருக்கு ஆசீர்வாதமானவன் – புறஜாதியாரிடத்திலிருந்து மணவாட்டியைப் பெற்றுக் கொண்டவன் (ஆதியாகமம் 41:1–45; எபேசியர் 5:22–32; அப்போஸ்தலர் 15:14).
6. தன் சகோதரர்களோடு ஒப்புரவாகி அவர்களை உயர்த்துகிறவன் (ஆதியாகமம் 45:1–15; உபாகமம் 30:1–10; ரோமர் 11:1,15,25,26).

## V. யாத்திராகமத்தில் முன்னடையாளங்கள் :

### அ. முழு ஆகமமும் மீட்பிற்கு ஓர் முன்னடையாளம் :

1. மீட்பு முழுமையாக தேவனால் உண்டானது (யாத்திராகமம் 3:7,8; யோவான் 3:16;எபேசியர் 1:7).
2. ஒரு நபர் மூலம் கிடைத்தது (யாத்திராகமம் 2:3; யோவான் 3:17).
3. இரத்தத்தின் மூலம் கிடைத்தது (யாத்திராகமம் 12:13,23,27; 1 பேதுரு 1:18,19).
4. வல்லமையினால் கிடைத்தது (யாத்திராகமம் 6:6; 13:14; ரோமர் 8:3).

### ஆ. மோசே :

கிறிஸ்துவுக்கு ஓர் முன்னடையாளம் (உபாகமம் 18:15; அப்போஸ்தலர் 3:22). தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவன் (யாத்திராகமம் 3:7–10). விடுவிப்பவன் (யாத்திராகமம் 3:7–10; ஏசாயா 61:1,2; லூக்கா 4:18; 2 கொரிந்தியர் 1:10; 1 தெசலோனிக்கேயர் 1:10).

1. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவன் (யாத்திராகமம் 3:7–10; அப்போஸ்தலர் 7:25).

2. இஸ்ரவேலரால் புறக்கணிக்கப்பட்டதால், புறஜாதியாரிடம் திரும்பியவன் (யாத்திராகமம் 2:11–15; அப்போஸ்தலர் 28:17–28).
3. புறக்கணிக்கப்பட்ட நேரத்தில் மணவாட்டியை அடைந்தவன் (யாத்திராகமம் 2:16–21; 2 கொரிந்தியர் 11:2).
4. திரும்பவுமாக இஸ்ரவேலின் மீட்பராக வந்தவன், ஏற்றுக்கொள்ளப்பட்டவன் (யாத்திராகமம் 4:29–31; அப்போஸ்தலர் 15:14–17; ரோமர் 11:24–26).
5. தீர்க்கதரிசியாகிய கிறிஸ்துவுக்கு முன்னடையாளமானவன் (அப்போஸ்தலர் 3:22,23). பரிந்து பேசுகிறவன் (யாத்திராகமம் 32:31–35; 1 யோவான் 2:1,2). வேண்டுதல் செய்கிறவன் (யாத்திராகமம் 17:1–6; எபிரெயர் 7:25). தலைவன் (உபாகமம் 33:4–5; எபிரெயர் 2:10).

**இ. பஸ்கா :**

யாத்திராகமம் 12:1–28. நம் பஸ்கா ஆட்டுக்குட்டியும், நம் மீட்பருமாயிருக்கிற கிறிஸ்துவுக்கு முன்னடையாளம் (யோவான் 1:29; 1 கொரிந்தியர் 5:6,7; 1 பேதுரு 1:18,19).

**பஸ்கா ஆட்டுக்குட்டியானது :**

1. பழுதற்றதாயிருக்க வேண்டும் (யாத்திராகமம் 12:5,6; 1 பேதுரு 1:19; லூக்கா 11:53,54; யோவான் 8:46; 18:38).
2. தெரிந்தெடுக்கப்பட்ட ஆட்டுக்குட்டி அடிக்கப்பட வேண்டும் (யாத்திராகமம் 12:5; யோவான் 12:24; எபிரெயர் 9:22; அப்போஸ்தலர் 2:23; வெளி.5:6; லூக்கா 9:22; வெளி.13:8).
3. இரத்தம் தெளிக்கப்பட வேண்டும் (யாத்திராகமம் 12:7). நாம் கிறிஸ்துவின் இரத்தத்தை விசுவாசத்தினால் நமக்குச் சொந்தமாக்கிக் கொள்கிறோம் (யோவான் 3:36; ரோமர் 3:26).
4. தெளிக்கப்பட்ட இரத்தம் மாத்திரமே நியாயத்தீர்ப்பிலிருந்து பூரணமான புகலிடம் அளிக்கிறது (யாத்திராகமம் 12:13; எபிரெயர் 10:10,14; 1 யோவான் 1:7).
5. மீட்பிற்குப் பின் உள்ள விருந்து – ஜீவ அப்பமாகிய கிறிஸ்துவையும், கர்த்தரின் பந்தியையும் முன்னடையாளமாகக் குறிக்கிறது (யோவான் 6:48; மத்தேயு 26:26–28; 1 கொரிந்தியர் 11:23–26).

**ஈ. மாரா :**

யாத்திராகமம் 15:22–27. கசப்பான தண்ணீர் ஒரு மரத்தினால் மதுரமானது – கல்வாரி மரமானது நம் கசப்பான வாழ்வை இனிப்பாக்குகிற கிறிஸ்துவுக்கு முன்னடையாளம் (1 பேதுரு 1:6–8).

**உ. மன்னா :**

யாத்திராகமம் 16:35. இது "அற்பமான உணவு" (எண்ணாகமம் 21:5) அல்லது "வானத்தின் தானியம்" (சங்கீதம் 78:24,25). தன்னை விசுவாசிக்கிறவன் ஜீவன் பெற்றுக் கொள்ளத்தக்கதாக தன்னை வெறுமையாக்கி ஜீவனைக் கொடுத்த வானத்தின் அப்பமாகிய கிறிஸ்துவுக்கு முன்னடையாளம். கிறிஸ்துவை தியானிப்பதே வானத்திலிருந்து வந்த மன்னாவை புசிப்பதாகும் (யோவான் 6:38–41). அது அமைப்பிலும் சிறியது (மனிதனாக ஆனது, வெறுமை யாக்கப்பட்டது), உருவத்திலும் (வட்டமானது, நித்தியமானது), பெயரிலும் ('அது என்ன?' என்னும் பொருள் கொண்டது, உலகம் அவரை அறியவில்லை), அளவிலும் (எல்லாருக்கும் போதுமானதாக இருந்தது). கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாகத் திகழ்கிறது.

**ஊ.ஓரேபிலுள்ள கன்மலை :**

யாத்திராகமம் 17:6 – இரட்சிப்பின் கன்மலையாகிய கிறிஸ்துவுக்கு முன்னடையாளம் (1 கொரிந்தியர் 10:4; 3:11; 1 பேதுரு 2:4–8; எபேசியர் 2:20; சங்கீதம் 62:2,6; ஏசாயா 8:14; 28:16; எண்ணாகமம் 20:11). இந்த அருமையான முன்னடையாளத்தில் பல காரியங்கள் அடங்கியுள்ளன:

1. அடிக்கப்பட்டது (கிறிஸ்துவைப்போல்) – தேவனாலும் (வெளி.13:8), மனிதனாலும் (யோவான் 18:22–23) அவர் அடிக்கப்பட்டார்.
2. தண்ணீர் புறப்பட்டு வந்தது (பரிசுத்த ஆவியானவரின் ஜீவன் தரும் வல்ல மைக்கு முன்னடையாளம்) (யோவான் 7:37–39; ரோமர் 8:2; யோவான் 6:63).
3. மக்கள் தகுதியற்றவர்களாயிருந்தார்கள் (நாமும் அவ்விதமே) (ரோமர் 3:9–12).
4. தண்ணீர் இலவசமாகக் கொடுக்கப்பட்டது (இரட்சிப்பும் அவ்வாறே) (ரோமர் 5:16,18).
5. எல்லாம் தேவனுடைய கிருபையாலும், வல்லமையாலும் கிடைத்தது (இரட்சிப்பும் அவ்விதமே) (எபேசியர் 2:8,9).
6. தண்ணீர் ஏராளமாகக் கிடைத்தது (தேவனுடைய கிருபையும் அப்படியே) (2 கொரிந்தியர் 9:8; ரோமர் 5:20).

7. மக்கள் செய்ய வேண்டியதெல்லாம் அந்தத் தண்ணீரைக் குடித்து விசுவாசத்தோடு வாழ்வதே (நமக்கும் அப்படியே) (யோவான் 7:38,39).

**எ. ஆசரிப்புக்கூடாரம் : (யாத்திராகமம் 25–31, 36–40 அதிகாரங்கள்)**

ஆசரிப்புக்கூடாரத்தில் அடங்கியுள்ள யாவும் கிறிஸ்துவுக்கு முன்னடையாளங்களாக உள்ளன. இதைக் குறித்து ஒரு தனிப்பாடமாகவே படிக்கலாம். நான் சுருக்கமாக கீழே கொடுத்துள்ள குறிப்புகள் இதை ஆழமாகப் படிக்க உங்களது ஆவிக்குரிய ஆர்வத்தைத் தூண்டும் என நம்புகிறேன். ஆசரிப்புக்கூடாரம் ஒரு முன்னடையாளம் என்பதற்கான வேதஆதாரத்திற்கு எபிரெயர் 9:1–26 வசனங்களை முதலாவது கவனமாக வாசியுங்கள்.

1. **பொதுவாக, ஆசரிப்புக்கூடாரம் ஒரு முன்னடையாளம் என்பதை மூன்று விதங்களில் புதிய ஏற்பாடு கூறுகிறது:**

   i) திருச்சபை அல்லது பரிசுத்த ஸ்தலம் – ஆவியானவர் மூலம் தேவன் வசிக்கும் இடம் (யாத்திராகமம் 25:8).

   ii) விசுவாசி (2 கொரிந்தியர் 6:16).

   iii)பரலோகத்திலுள்ளவைகளின் சாயலாகவும், அடையாளமாகவும் (எபிரெயர் 9:23,24).

2. **ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள நிறங்கள் கூட முன்னடையாளங்களாக உள்ளன :**

   பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அவைகளின் முக்கியத்துவம் பின்வருமாறு: பொன் கிறிஸ்துவின் தெய்வீகத்தையும், வெள்ளி மீட்பையும், வெண்கலம் நியாயத்தீர்ப்பையும் குறிக்கிறது. இளநீலம் பரலோகத் தன்மையையும், அங்கிருந்து தோன்றியதையும் குறிக்கிறது. இரத்தாம்பரம் கிறிஸ்துவின் ராஜதன்மையையும், சிவப்பு இரத்தப்பலியையும் குறிக்கிறது.

3. **உடன்படிக்கைப் பெட்டி : (யாத்திராகமம் 25:10; 37:1–5)**

   சித்தீம் மரத்தினாலும், பொன்னினாலும் செய்யப்பட்ட இந்தப் பெட்டி கிறிஸ்துவின் மனிதத்தன்மைக்கும், தெய்வீகத் தன்மைக்கும் முன்னடையாளமாகும். அதன் உள்ளேயிருந்த நியாயப்பிரமாணம், மன்னா, ஆரோனுடைய தளிர்த்த கோல் (எபிரெயர் 9:4) ஆகியவை கிறிஸ்து தம் இருதயத்திலே நியாயப்பிரமாணம் வைத்திருக்கிறதையும், தம் ஜனத்திற்கு உணவாக இருப்பதையும், அவருடைய உயிர்த்தெழுதலையும் முறையே குறிக்கும் முன்னடையாளங்களாகும்.

4. **கிருபாசனம் : (யாத்திராகமம் 25:17–23; 37:6–9)**

   உடன்படிக்கைப் பெட்டியை மூடியுள்ள பசும் பொன்னினாலான இதன்மீது பாவநிவிர்த்தி செய்யும் நாளிலே பிரதான ஆசாரியனாலே இரத்தம் தெளிக்கப்பட்டது. பாவமறியாத ஒன்றின் இரத்தத்தைத் தேவன் பார்க்கும் போது அவரது பரிசுத்தமான எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்பட்டன. அவரது நியாயம் வெளிப்படுத்தப்பட்டது. அவருடைய நீதி திருப்தியானது. நியாயாசனமாக இருக்கக்கூடிய அந்த இடம் "கிருபாசனமாக" மாறியது. இவையாவும் நமக்குப் பதிலாக கிருபாதாரபலியாக தன்னை ஒப்புக்கொடுத்து, தேவநீதியை நமக்காக உண்டாக்கிய கிறிஸ்துவை முன்னடையாளமாகக் குறிக்கிறது (ரோமர் 3:24–26).

5. **சமூகத்தப்பங்களை வைக்கும் மேஜை : (யாத்திராகமம் 25:23–30; 37:10–16)**

   வாழ்வு தரும், வாழ்வைப் பாதுகாக்கும் தேவ அப்பமாக கிறிஸ்துவை வெளிப்படுத்துகிறது.

6. **குத்துவிளக்கு : (யாத்திராகமம் 25:31; 37:17–24)**

   உலகின் ஒளியாகப் பிரகாசிக்கும் கிறிஸ்துவுக்கு முன்னடையாளம் (யோவான் 1:4,9; 8:12; 9:5).

7. **(திரித்த மெல்லிய பஞ்சு நூலினாலான) மூடுதிரை : (யாத்திராகமம் 26:1; 36:8)**

   பரிசுத்தவான்களின் நீதியையும் (வெளி.19:8), கிறிஸ்துவின் நீதியையும் குறிக்கும் முன்னடையாளம்.

8. **திரைச்சீலை : (யாத்திராகமம் 26:31; 36:25)**

   கிறிஸ்துவின் சரீரத்திற்கு முன்னடையாளம் (எபிரெயர் 10:19; மத்தேயு 27:50–51 ஆகியவற்றை வாசியுங்கள்).

9. **பலிபீடம் : (யாத்திராகமம் 27:1; 38:1–2)**

   பழுதற்ற பலியாக, தகனபலியாக தம்மை நமக்காக சிலுவையிலே செலுத்திய கிறிஸ்துவின் முன்னடையாளம்.

10. **எண்ணெய் : (யாத்திராகமம் 27:20)**

    குத்துவிளக்கு எரிவதற்கு இடித்து பிழியப்பட்ட ஒலிவ எண்ணெய் – பரிசுத்த ஆவியானவருக்கு முன்னடையாளம். பரிசுத்த ஆவியானவர் மூலமே நாம் ஒளியில் நடக்க முடியும் (சகரியா 4:2–6; 1 யோவான் 1:7; கலாத்தியர் 5:16; எபிரெயர் 1:9). கிறிஸ்து பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்பட்டார்.

11. **ஆரோனும், அவன் குமாரரும் : (யாத்திராகமம் 28:1; எண்ணாகமம் 3:10)**

ஆரோனுடைய ஆசாரிய ஊழியத்தின் மாதிரியைப் பின்பற்றி கிறிஸ்துவும் பிரதான ஆசாரிய ஊழியத்தைச் செய்கிறார் (எபிரெயர் 8:1–6; 9:1–28). ஆரோனுடைய குமாரர் சபை யுகத்திலே ஆசாரியக்கூட்டமாய் இருக்கும் விசுவாசிகளுக்கு முன்னடையாளமாக உள்ளனர் (வெளி. 1:6; 1 பேதுரு 2:9).

12. **தூபபீடம்: (யாத்திராகமம் 30:1; 37:25–29).**

நமக்காக வேண்டுதல் செய்கிற கிறிஸ்துவுக்கு முன்னடையாளம் (எபிரெயர் 7:25; யோவான் 17:1–26).

13. **கூடாரவாசல் : (யாத்திராகமம் 38:18–29)**

இரட்சிப்புக்கு ஒரே வாசலாயிருக்கிற கிறிஸ்துவுக்கு முன்னடையாளம் (யோவான் 10:9; 14:6). கூடாரத்திற்கு ஒரே ஒரு வாசல்தான் இருந்தது. 27 அடி அகலமாயிருந்தது (இரட்சிப்பின் வாசலும் அப்படியே உள்ளது வெளி. 22:17). தொங்கு திரைகள் கிறிஸ்துவின் தாழ்மையையும், அவைகளின் நிறங்கள் அவருடைய குணாதிசயங் களையும், தூண்கள் கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையையும் எடுத்துக்காட்டுகிற நான்கு சுவிசேஷங்களையும் குறிக்கும் முன்னடையாளங்களாகும்.

## VI.லேவியராகமத்தில் முன்னடையாளங்கள் :

இதில் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. எல்லா முன்னடையாளங்களும் கிறிஸ்துவுக்குப் பொருந்துகிறது.

**அ. பலிகள் :**

கீழ்வரும் ஐந்து பலிகள் இயேசுகிறிஸ்து தம் சரீரத்தை ஒரே பலியாக செலுத்தியதற்கு முன்னடையாளங்கள்.

இவற்றில் முதல் மூன்றும் ''சுகந்த வாசனையான தகனபலிகள்.'' இவை கிறிஸ்துவின் பரிபூரணத்தையும், பிதாவாகிய தேவனின் சித்தத்தை நிறைவேற்ற தன்னை முழுமையாக அர்ப்பணித்ததற்கும் முன்னடையாளம். அடுத்த இரண்டும் ''சுகந்த வாசனையற்ற தகனபலிகள்.'' அவைகள் பாவியின் குற்றத் தையும், சாபத்தையும் கிறிஸ்து சுமப்பதைக் குறிக்கும் முன்னடையாளங்களாகும்.

1. **தகனபலி : (லேவியராகமம் 1:3–17; 6:8–13)**

கிறிஸ்து தம்மைப் பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்ததற்கு இது முன்னடையாளம். இதனால் தேவனின் பரிசுத்தமும் திருப்தி செய்யப்பட்டு அவரது நீதி திருப்தியாக்கப்படுகிறது. இந்த பலி தானாக முன் வந்து செய்யப்படுகிறது. இங்கு பாவத்தைக் குறித்து சொல்லப்படவில்லை. ஏனெனில், ''அவரை விசுவாசிக்கிறவன் எவனும். . . நீதிமானாக்கப்படுகிறான்'' (அப்போஸ்தலர் 13:39; எபிரெயர் 10:7,8).

2. **போஜனபலி : (லேவியராகமம் 2ம் அதிகாரம், லேவியராகமம் 6:14–23; 21:17)**

இரத்தம் இல்லை! கிறிஸ்துவின் மாசற்ற மனிதத்துவத்தைக் குறிக்கிறது. தேவ தயவைப் பெறும்படியாக செலுத்தப்படும் பலி. கிறிஸ்துவே நமது 'போஜனபலியாக' தேவ அப்பமாக இருக்கிறார். நம் வாழ்வைக் காக்கிறவரும் அவரே. விசுவாசியைப் போஷிக்கிறவரும் அவரே (எபிரெயர் 7:26; யோவான் 6:51).

3. **சமாதான பலி : (லேவியராகமம் 3:1–17; 7:11–13).**

கிறிஸ்து தமது மரணத்தினாலே நம்மைத் தேவனோடு ஒப்புரவாக்கி, தேவனுடன் நமக்கு சமாதானத்தை உண்டாக்கினார் (ரோமர் 5:1; கொலோசெயர் 1:20). பாவ, குற்ற நிவாரண பலிகள்: இந்த இரு பலிகளும் அவைகளின் முன்னடையாள அர்த்தத்தைத் தவிர மற்றவற்றில் ஒரே தன்மை உடையவை (லேவியராகமம் 4 மற்றும் 5 அதிகாரங்கள், லேவியராகமம் 6:1–7).

4. **பாவநிவாரண பலி :**

மனிதனின் பாவத்தன்மைக்காக கிறிஸ்து செய்யும் பிராயச்சித்தம். இதில் 'கிறிஸ்து நமக்காகப் பாவமாக்கப் பட்டார்' (2 கொரிந்தியர் 5:21). இதில் பாவம் என்பது ''இலக்கினை தவறுதல்'' ஆகும் (ரோமர் 3:23). இதில் மிருகம் பாளயத்திற்குப் புறம்பே சுட்டெரிக்கப்பட வேண்டும். கிறிஸ்துவும் 'பாளயத்திற்குப் புறம்பே' தம்மைப் பலியாகக் கொடுத்தார் (எபிரெயர் 13:11).

5. **குற்றநிவாரண பலி :**

விசுவாசிகளின் பாவச் செயல்களையும், குற்றங்களையும் கிறிஸ்து சுமப்பதைக் குறிக்கிறது. பாவியினுடைய பாவங்கள், அவற்றைத் தமது சொந்த சரீரத்திலே சிலுவையிலே சுமந்தவராலே மன்னிக்கப்பட்டன (1 பேதுரு 2:24; ஏசாயா 53:6).

**ஆ. இஸ்ரவேலின் பண்டிகைகள் :**

**1. பஸ்கா பண்டிகை : (லேவியராகமம் 23:4,5; யாத்திராகமம் 12:12,13)**

சங்கார தூதனிடமிருந்து பாதுகாக்கப்படுவதற்காக பஸ்கா ஆட்டை அடித்து, அதின் இரத்தத்தை வீட்டின் நிலைக்கால்களிலும், மேற்சட்டத்திலும் தெளித்ததை நினைவுகூர்ந்து ஆசரிக்கும் பண்டிகை. கிறிஸ்து நமது பஸ்காவாயிருக்கிறார் (1 கொரிந்தியர் 5:7).

**2. புளிப்பில்லாத பண்டிகை : (லேவியராகமம் 23:6–8)**

எல்லா புளிப்பான அப்பமும் (பாவத்திற்கு முன்னடையாளம்) நீக்கப்பட்டுவிடும். கிறிஸ்துவே நாம் (புசிக்கும்) உண்ணும் புளிப்பில்லாத (பாவமில்லாத) அப்பமாயிருக்கிறார். அவரைப் புசித்து அவரோடு ஐக்கியமாயிருக்க வேண்டுமானால் நம்மில் உள்ள புளிப்பானவற்றை (பாவத்தை) நீக்க வேண்டும் (1 கொரிந்தியர் 5:7; 2 கொரிந்தியர் 7:11; கலாத்தியர் 5:9).

**3. முதற்பலன்களின் பண்டிகை : (லேவியராகமம் 23:9–14).**

அறுப்பின் முதற்பலன்கள் கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டப்பட்டன. கிறிஸ்து பஸ்கா பண்டிகையின் போது மரித்தார். அவர் உயிர்த்தெழுந்து நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார் (1 கொரிந்தியர் 15:20,23).

**4. பெந்தெகொஸ்தே பண்டிகை :**

இது பண்டிகைகளில் இரண்டாவது பெரிய பண்டிகை. பெந்தெகொஸ்தே என்றால் 50 என்று பொருள் (வாரங்களின் பண்டிகை என்றும் அழைக்கப்படும்) (லேவியராகமம் 23:15–27). முதற்பலன்களின் பண்டிகையிலிருந்து 50 நாட்கள் கழித்து இது ஆசரிக்கப்பட்டது.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு 50 நாட்களுக்குப் பின்னர் பெந்தெகொஸ்தே வந்தது. கதிர்கட்டுக்குப் பதிலாக, புளிப்பாக செய்யப்பட்ட அப்பங்கள் இப்போது கொண்டுவரப்படும். பெந்தெகொஸ்தேயின் போது பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளை ஒரே அப்பமாக ஆக்கினார் (1 கொரிந்தியர் 12:12–13). ஆனால் பாவம் (புளிப்பானது) சபையில் காணப்பட்டது (அப்போஸ்தலர் 5:1–10).

**5. எக்காளங்களின் பண்டிகை : (லேவியராகமம் 23:23–25)**

அறுப்புக்குப் பின்னர் கொண்டாடப்படும் புதிய வருடத்தின் பண்டிகை. அன்று எக்காளங்கள் ஊதப்பட்டன. வேலைகள் யாவும் நிறுத்தப்பட்டன. கிறிஸ்து திரும்ப வரும்போது, புதியதோர் நாளின் ஆரம்பத்தைக் குறிக்க எக்காளங்கள் ஊதப்படும் 1 தெசலோனிக்கேயர் 4:16; 1 கொரிந்தியர் 15:52). சபை யுகத்திற்குப் பின்னர் இஸ்ரவேலின் மனந்திரும்புதலையும் அதன் சீர்படுத்துதலையும் எடுத்துக்காட்டும் பண்டிகை (அப். 15:14–17).

**6. பாவநிவிர்த்திப் பண்டிகை : (லேவி.23:26–32)**

வருடந்தோறும் கூடாரப்பண்டிகைக்கு ஐந்து நாட்கள் முன்னர் உபவாசத்திற்கும், ஓய்வுக்கும் என ஆசரிக்கப்படும் பண்டிகை. இந்த நாளில் பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து இஸ்ரவேல் ஜனங்களுக்கு பாவநிவிர்த்தி செய்வான். கிறிஸ்து நமது பிரதான ஆசாரியராயிருக்கிறார் (எபிரெயர் 9:1–11,26). கிறிஸ்துவின் வருகைக்கு இஸ்ரவேலைச் சுத்திகரிப்பதையும், ஆயத்தமாக்குதலையும் இது குறிக்கிறது.

**7. கூடாரப்பண்டிகை : (லேவியராகமம் 23:33–34)**

'கூடாரங்கள்' என்பது இப்பண்டிகையின் போது இஸ்ரவேல் மக்கள் வசிக்கும் இடங்களைக் குறிக்கிறது. எருசலேமிலே வருடத்திற்கு ஒருமுறை, தங்களது கடந்தகால விடுதலையையும், எதிர்கால மகிமையையும் கொண்டாடும் பண்டிகை. இது கர்த்தருடைய இராப்போஜனத்திற்கு ஒரு முன்னடையாளமாகும் (1 கொரிந்தியர் 11:24–26).

## VII. பழைய ஏற்பாட்டில் உள்ள பிற முன்னடையாளங்கள் :

**அ. வெண்கல சர்ப்பம் : (எண்ணாகமம் 21:5–9)**

நமக்காகப் பாவமான கிறிஸ்துவுக்கு முன்னடையாளம் (2 கொரிந்தியர் 5:21; யோவான் 3:14–15).

**ஆ. யோசுவா :**

'யேகோவா இரட்சகர்' எனப் பொருள்படும் (யோசுவா 1:1–9). நமது இரட்சிப்பின் அதிபதியாகிய கிறிஸ்துவுக்கு முன்னடையாளம் (எபிரெயர் 2:10).

1. அவர் மோசேயைப் பின்தொடர்கிறார் (யோவான் 1:17).
2. வெற்றிக்கு வழி நடத்துகிறார் (2 கொரிந்தியர் 2:14).

3. தோல்வியில் பரிந்து பேசுபவர் (1 யோவான் 2:1,2).
4. அவர்களுடைய சுதந்திரத்தைப் பங்கிட்டுக் கொடுத்தார் (எபேசியர் 1:11,14).

**இ. யோர்தான் நதியைக் கடந்து செல்லுதல் : (யோசுவா 3–ம் அதிகாரம்)**

கிறிஸ்துவுடன் நாம் மரிப்பதையும், அவரோடு உயிர்த்தெழுவதையும் குறிக்கும் முன்னடையாளம் (ரோமர் 6:1–10; எபேசியர் 2:5,6; கொலோசெயர் 3:1–3). கானானைச் சுதந்தரித்தல் நாம் மோட்சத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்னடையாளமல்ல. ஏனெனில் கானான் வாழ்க்கை வெற்றிகளும், தோல்விகளும் கூடின போராட்டங்கள், சோதனைகள், பிரச்சனைகள் நிறைந்த காலம். கிறிஸ்துவுக்குள் உயிர்ப்பிக்கப்பட்ட நம்முடைய புது வாழ்க்கைக்கு இது முன்னடையாளமாகும். இந்த வாழ்க்கையில் நாம் அந்தகார சக்திகளோடும் (எபேசி.6:12,13), நமது மாம்சத்தின் பலவீனத்தோடும் (கலாத்தியர் 5:16–17) போராடுகிறோம்.

**ஈ. ரூத்தும், போவாசும் (ரூத் 2:1; 3:10–18; 4:1–10 வாசியுங்கள்)**

புறஜாதியைச் சேர்ந்த ரூத், தனது மீட்பின் நம்பிக்கை போவாசிடம் உள்ளது என உணர்ந்து போவாசைத் தனது சுதந்திரவாளியாக, மீட்பராக கொள்கிறாள். மீட்பிற்கான விலையை போவாஸ் செலுத்தி அவளைத் திருமணம் செய்து கொள்கிறான். கிறிஸ்து நமது சுதந்திரவாளியாக, மீட்பராக இருக்கிறார்.

**முடிவுரை:**

முன்னடையாளங்களைக் குறித்த இந்தக் கல்வி, ''வேதவாக்கியங்கள் யாவும் தேவனால் அருளப்பட்டிருக்கிறது'' என்ற நிச்சயத்தை நமக்குத் தருகிறது (2 தீமோத்தேயு 3:16). இயேசுகிறிஸ்துவைக் குறித்து சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே (யோவான் 5:39; லூக்கா 24:27,44; அப்போஸ்தலர் 8:35).முன்னடையாளங்கள் என்னும் (பெரியதோர்) நிலத்தில் நாம் மேலோட்டமாகவே மேய்ந்திருக்கிறோம். நாம் தொடாத பல முன்னடையாளங்களும், போதிக்காத பல உண்மைகளும் இன்னும் உள்ளன என்பதை நினைவில் கொள்ளுங்கள். இந்த ஆராய்ச்சியானது ஆண்டவருடைய வார்த்தைகளை இன்னும் அதிகமாகவும், ஆழமாகவும் படிக்க உங்களைத் தூண்ட வேண்டுமென நாங்கள் ஜெபிக்கிறோம்.

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்கு முன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்துகொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

# பழைய ஏற்பாட்டில் முன்னடையாளங்கள்

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

இயக்குனர், *ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**(பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்)**

**சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்**

1. யோவான் 5:39–ம் வசனம் பழைய ஏற்பாட்டைக் குறித்து நமக்கு என்ன காண்பிக்கிறது?
   a. இயேசுவானவர் பழைய ஏற்பாட்டிலிருந்து அநேக உபதேசங்களைப் போதிக்கிறார்
   b. கிறிஸ்து பழைய ஏற்பாட்டின் பொருளும், கருத்துமாய் இருக்கிறார்
   c. கிறிஸ்து பழைய ஏற்பாட்டில் இடம் பெறவில்லை
2. கீழே குறிக்கப்பட்டுள்ளவைகளில் கிறிஸ்து பழைய ஏற்பாட்டில் காணப்படுபவைகளில் சரியான **மூன்றை** வட்டமிடவும்.
   a. முன்னடையாளங்கள்
   b. நிழல்கள்
   c. சத்தம்
   d. அடையாளங்கள்
   e. ஆவி
3. பழைய ஏற்பாட்டில் உள்ள முன்னடையாளங்களைப் படிப்பதால் விசுவாசிக்கு பயன் என்ன?
   a. தேவனோடு நடப்பதற்கு உதவுகிறது
   b. கிறிஸ்துவை அதிகமாக நேசிப்பதற்கு உதவுகிறது
   c. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து நன்கு அறிந்துகொள்ள முடிகிறது
4. முன்னடையாளங்களைப் படிப்பதற்கான அதிகாரத்தை வேதாகமத்தின் எந்த பகுதி நமக்கு கொடுக்கிறது?
   a. எபேசியர் 1:1–14
   b. யோவான் 1:1–13
   c. 1 கொரிந்தியர் 10:1–11
5. முன்னடையாளம் எதை குறிக்கிறதாக இருக்கிறது? (**மூன்றை** வட்டமிடவும்)
   a. மிருகம்
   b. கருத்து
   c. நபர்
   d. நியமம்
   e. போதனை
6. ஒரு நபர் அல்லது பொருள் எப்பொழுது முன்னடையாளமாகக் கருதப்படுவதில்லை?
   a. பழைய ஏற்பாடு இது முன்னடையாளம் அல்ல என்று சொல்லும் பொழுது
   b. புதிய ஏற்பாட்டில் அதனின் நிறைவேறுதல் இல்லாத பொழுது
   c. பழைய ஏற்பாட்டில் ஒரு நபர் காணப்படும் பொழுது

7. ஆதாம் யாருக்கு முன்னடையாளமாக இருக்கிறார்?
   a. கிறிஸ்துவுக்கு
   b. அப்போஸ்தலனாகிய பவுல்
   c. மோசே

8. ஆதாம் ஏவாளுக்கு ஆயத்தமாக்கப்பட்ட மிருகத்தின் தோல் புதிய ஏற்பாட்டில் எதனின் நிறைவேறுதலாய் இருக்கிறது?
   a. கிறிஸ்துவின் நீதி
   b. விசுவாசியின் சுய–நீதியின் கிரியை
   c. விசுவாசியின் வெட்கம்

9. காயீனும், ஆபேலும் புதிய ஏற்பாட்டில் எதற்கு முன்னடையாளமாக இருக்கின்றனர்?
   a. கிறிஸ்துவுக்கும், சாத்தானுக்கும்
   b. மேய்ப்பனுக்கும், வேட்டைக்காரனுக்கும்
   c. அவிசுவாசிக்கும், விசுவாசிக்கும்

10. புதிய ஏற்பாட்டில் ஏனோக்கு எதற்கு முன்னடையாளமாக இருக்கிறார்?
   a. கிறிஸ்து ஒரு சேவகர்
   b. எடுத்துக் கொள்ளப்படும் ஒரு விசுவாசி
   c. உபத்திவரக் காலத்தில் கடந்து செல்லும் ஒரு விசுவாசி

11. புதிய ஏற்பாட்டில் சாராள் எதற்கு முன்னடையாளமாக இருக்கிறாள்?
   a. நகைப்பு
   b. கிருபை
   c. விசுவாசம்

12. யாத்திராகமம் புத்தகம் எதற்கு முன்னடையாளமாக இருக்கிறது?
   a. மீட்பு
   b. புதிய ஆரம்பம்
   c. பரிசுத்தமாக்கப்படுதல்

13. மோசே எதற்கு முன்னடையாளமாக இருக்கிறார்?
   a. மீட்பராகிய கிறிஸ்து
   b. ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்து
   c. கிறிஸ்துவின் இரட்சிப்பின் கன்மலை

14. பஸ்கா எதற்கு முன்னடையாளம்?
   a. மீட்பராகிய கிறிஸ்து
   b. ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்து
   c. நமது இரட்சகராகிய கிறிஸ்து

15. மன்னா எதற்கு முன்னடையாளம்?

a. சிலுவை மரம்

b. வானத்தின் அப்பமாகிய கிறிஸ்துவுக்கு

c. இரட்சிப்பின் தண்ணீர்

16. வெண்கல சர்ப்பம் எதற்கு முன்னடையாளம்?

a. கிறிஸ்து நமது இரட்சிப்பின் தளபதி

b. கிறிஸ்து நமது உறவினராகிய மீட்பர்

c. கிறிஸ்து நமக்காக பாவமாக்கப்பட்டார்

17. போவாஸ் எதற்கு முன்னடையாளமாக இருக்கிறார்?

a. கிறிஸ்து நமது இரட்சிப்பின் தளபதி

b. கிறிஸ்து நமது உறவினராகிய மீட்பர்

c. கிறிஸ்து நமக்காக பாவமாக்கப்பட்டார்

**கோடிட்ட இடங்களை நிரப்புக :–**

18. ஒரு முன்னடையாளம் தேவனால் திட்டம் பண்ணப்பட்டு ---------------------------- வெளிப் படுத்தப்பட்டுள்ள சத்தியமாக ---------------------------------------- கூறப்பட்டுள்ளது.

19. பொருத்துக :– (சரியான வசனத்தை வார்த்தைகளுக்கு முன்பு எடுத்து எழுதவும்)

| | | |
|---|---|---|
| -------- | மாதிரியாக இருப்பது | a. ரோமர் 15:4 |
| -------- | நாம் கற்றுக்கொள்வதற்கு | b. 1 கொரிந்தியர் 10:11 |
| -------- | கிறிஸ்துவை வெளிப்படுத்தி, மகிமைப்படுத்துவதற்கு | c. லூக்கா 24:44 |

**கோடிட்ட இடங்களை நிரப்புக :–**

20. ஏவாள் – விசுவாசிக்கும், சபைக்கும் முன்னடையாளமாக இருக்கிறாள்.

a. ஆதாமிலிருந்து அவள் உருவாக்கப்பட்டாள். நாம் ———————————— உருவாக்கப்பட்டிருக்கிறோம்.

b. அவள் ஆதாமின் மனைவி. சபை ---------------------------------- மணவாட்டி

c. ஆதாமின் சுபாவம் அவளுக்கு கொடுக்கப்பட்டது. நமக்கு ------------------ சுபாவம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

21. பொருத்துக :– (யோசேப்பின் வாழ்க்கையை கிறிஸ்துவின் வாழ்க்கையோடு ஒப்பிட்டுக் காட்டவும்)

| | | |
|---|---|---|
| -------- | யோசேப்பு தனது தந்தையின் அன்புக்கு உரியவர் | a. ரோமர் 11:1 |
| -------- | யோசேப்பு தனது சொந்த சகோதரர்களால் பகைக்கப்பட்டார் | b. யோவான் 15:25 |
| -------- | யோசேப்பு தனது சொந்த சகோதரர்களால் நிராகரிக்கப்பட்டார் | c. யோவான் 15:18,24,25 |
| -------- | யோசேப்பு தனது சொந்த சகோதரர்களோடு ஒப்புரவாகினார் | d. யோவான் 3:35 |

22. ஆசரிப்புக்கூடாரத்தில் கீழ்கண்ட பொருள்கள் எதற்கு முன்னடையாளம்?

a. உடன்படிக்கை ---------------------------------------------------- ----

b. சமூகத்தப்பங்களை வைக்கும் மேஜை ------------------------------------------------------
----

c. குத்துவிளக்கு ------------------------------------------------------
----

d. தூபபீடம் ------------------------------------------------------
----

23. கீழே உள்ள பலிகள் எதற்கு முன்னடையாளம்?

a. தகனபலி ------------------------------------------------------
------

b. சமாதான பலி ------------------------------------------------------
------

c. பாவநிவாரண பலி ------------------------------------------------------
------

24. இஸ்ரவேலர்கள் ஏழு பண்டிகைகளை அனுசரித்தனர். கீழே உள்ள **2 பண்டிகைகள்** கிறிஸ்துவைக் குறித்து போதிப்பது என்ன?

a. பஸ்கா பண்டிகை ------------------------------------------------------
------

------------------------------------------------------
------

b. புளிப்பில்லாத பண்டிகை ------------------------------------------------------
------

------------------------------------------------------
------

---

**அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்**

**பதிவு எண் :** ____________________

**முழு பெயர் :** ________________________________________________

**முகவரி :** ________________________________________________

________________________________________________